சுருக்கம்

நுகர்வோர் பாதுகாப்பு – நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தும் குறும்படத்தை தயாரித்து தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புதல் ரூ.32 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எச்2) துறை

அரசு ஆணை (நிலை) எண்:333 நாள்: 11.12.2007

படிக்க:

1. முதன்மை ஆணையர் மற்றும் ஆணையரின் கடித எண்.ஆர்.சி.எண்.சிப்பி.4/14444/ 2007, நாள்.29.5.2007
2. முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கடிதம் எண். ஆர்.சி.சிப்பி4/14444/ 2007 நாள் 12.7.2007
3. முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நேர்முக கடிதம் எண்.சிப்பி1/14444/2007, நாள்.22.10.2007

-----

ஆணை:–

நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தும் குறும்படத்தை தயாரித்து தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்புவது குறித்து சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினை கலந்தாலோசித்து கீழ்க்காணும் கருத்துருவினை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளார்.

2. நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் விழிப்புணர்ச்சி பற்றிய செய்திகள் கொண்ட வீடியோ குறும் படங்கள் 30 நொடி நேர 10 நிகழ்ச்சிகள் மற்றும் 10 நொடி நேர 10 நிகழ்ச்சிகளாக மொத்தத்தில் 20 நிகழ்ச்சிகளை சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் உதவியுடன் குறிப்பாக கிராமப்புற பெண்களைக் கவரும் வகையில் தயாரித்து கேபிள் வசதி இல்லாத இடங்களில் கூட சென்னைத் தொலைக்காட்சி நிலையம் மூலம் இப்படத்தை ஒளிபரப்பவும், கேபிள் வசதி உள்ள இடங்களில் அனைத்து கேபிள் தொலைக்காட்சி மூலமாகவும் ஒளிபரப்பவும் முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசின் அனுமதி கோரியுள்ளார். இதற்கென ஆகும் உத்தேச செலவினத்தையும் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண். | செலவினம் | மொத்தத் தொகை |
|---|---|---|
| 1. | தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்பப்பட உள்ள 10 நொடி நேர 10 நிகழ்ச்சிகள் மற்றும் 30 நொடி நேர 10 நிகழ்ச்சிகள் கொண்ட வீடியோ குறும் படம் தயாரிப்பதற்கான கட்டணம் (சென்னை தொலைக்காட்சி நிலையம் அளித்துள்ள விலை விவரப்படி) | ரூ.8,51,910/– |
| 2. | இக்குறும்படங்களை பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் வழங்குவதற்காக ஒரு நிகழ்ச்சிக்கு ரூ.25,000/– வீதம் 20 நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்க சென்னை தொலைக்காட்சி நிலையம் கலைஞர்களுக்கு வழங்கவேண்டிய தொகை | ரூ.5,00,000/– |

| | | |
|---|---|---|
| 3. | ஜுலை 2007 லிருந்து மார்ச் 2008 வரை தொலைக்காட்சியில் வாரம் 1–க்கு 720 நொடிகள் என்ற விதத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் திரும்ப திரும்ப 39 வாரங்களுக்கு இந்த வீடியோ குறும் படத்தை ஒளிபரப்புவதற்கு ஆகும் செலவு | ரூ.16,77,000/– |
| 4. | எதிர்பாராத செலவு உள்ளிட்ட மற்றும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள், நுகர்வோர் சங்கங்கள் தன்னார்வ நுகர்வோர் மையங்கள் ஆகியவற்றுக்கு இந்த வீடியோ குறும் படங்களை விநியோகம் செய்வதற்கான செலவு | ரூ.1,71,090/– |
| | மொத்தம் | ரூ.32,00,000/– |

3. வீடியோ குறும்படங்கள் தயாரித்து ஒளிபரப்பும் பணியினை நிறைவேற்றி முடிப்பதற்கு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழுவினை அமைக்கவும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | தலைவர் |
| 2. | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இணை ஆணையர் | செயல் அலுவலர் (Nodal Officer) செயல் உறுப்பினர் |
| 3. | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துணை ஆணையர் – I | உறுப்பினர் |
| 4. | முன்னணி நுகர்வோர் சங்கங்களின் நுகர்வோர் தன்னார்வ ஆர்வலர் | உறுப்பினர் |
| 5. | சென்னைத் தொலைக்காட்சி நிலைய பிரதிநிதி | உறுப்பினர் |

மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ரூ.32 இலட்சம் தமிழ்நாடு நுகர்வோர் நலநிதியிலிருந்து விடுவிக்குமாறு முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. உணவு பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மை ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. மாநில அரசின் அங்கீகாரம் பெற்ற தனியார் படத்தயாரிப்பாளர்களை தேர்வு செய்து அவர்களின் சேவையை பயன்படுத்தி அரசு ஆணை (நிலை) எண்.205 செய்தி மற்றும் சுற்றுலா நாள் 13.8.97ல் தெரிவிக்கப்பட்ட நெறி முறைகளைப் பின்பற்றி நுகர்வோர் கல்வி மற்றும் விழிப்புணர்வின் அவசியத்தை வலியுறுத்தும் குறும் படத்தை தயாரித்து தொலைக்காட்சி மூலம் ஒளிப்பரப்ப தேவைப்படும் செலவு தொகையான ரூ.32 இலட்சம் (ரூபாய் முப்பத்தி இரண்டு இலட்சம் மட்டும்) சிறப்பு நேர்வாகக் கருதி தமிழ்நாடு நுகர்வோர் நல நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது இந்த நுகர்வோர் நலநிதியிலிருந்து ரூ.16.77 இலட்சம் 2007–08 நிதியாண்டிலும், ரூ.15.23 இலட்சம் அடுத்த நிதியாண்டான 2008–09–ல் செலவிடவும் அனுமதிக்கப்படுகிறது.

**5.** இத்தொகையினைப் பெற்று, செலவழிக்க உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

> “ **3456 – 00–** நுகர்பொருள் வழங்கல் **800** ஏனைய செலவு **1** திட்டத்தில் சேராதது AE – நுகர்வோர் கல்வி பாதுகாப்புக்குழு நிதி உதவி – **09 –** உதவி மானியங்கள் **03 –** குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் “ (குதொகு 3456 00 800 AE 0939)

இச்செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

6. ரூ.16.77 இலட்சம் திருத்த / இறுதி திருத்த மதிப்பீடு 2007–08 ஒதுக்கீடு செய்யப்படும். நிதி ஒதுக்கத்தினை எதிர் நோக்கி இதர வகையில் சரியாக இருக்கும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர் செலவினத் தொகை அனுமதிக்க அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதிதுறையின் இசைவினை அத்துறையின் அ.சா.கு. எண்321/SS/(PK)/07CF&CP/2007 நாள் 06.12.2007 மற்றும் கூடுதல் பேரேடு எண் 1447 (ஆயிரத்து நானூற்று நாற்பத்து ஏழு) வாயிலாக பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி //

க. சண்முகம்
அரசு செயலாளர்.

பெறுநர்

ஆணையர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை,
சென்னை –5
இயக்குநர், தமிழ்நாடு திரைப்பட பிரிவு, சென்னை –113
தலைமை தயாரிப்பாளர், தமிழ்நாடு திரைப்பட பிரிவு, சென்னை –113.
தலைமை செயலக அனைத்து துறைகள், சென்னை –9.
அனைத்து துறை தலைவர்கள்,
தனியார் படத்தயாரிப்பாளர்கள் (ஏற்புப் பட்டியலில் உள்ளபடி)
மாநிலக் கணக்காயர், சென்னை –6/18/35.
முதன்மை மாநில கணக்காய;ா(AE) சென்னை –18
நகல்:
நிதி (வ.செ.பொது.2/கூ.உ.(ம) நு.பா) துறை, சென்னை –9.
செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை –9.
முதுநிலை நேர்முக உதவியாளர், உணவு அமைச்சர் அலுவலகம், சென்னை –9.
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.